1992 ஏப்ரல் 1]

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்தில் கிட்டத்தட்ட 250 டன் அளவுக்கு கடுக்காய் ஜவ்வாது மலையில் கிடைக்கின்றது. மேலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு இது மிகவும் தேவைப்படுகிறது. வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் அதிக அளவில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே, கடுக்காய் தொழிற்சாலையை, பின் தங்கிய பகுதியாக இருக்கின்ற செங்கத்தில் ஏற்படுத்த தாங்கள் மறு பரிசீலனை செய்வீர்களா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுக்காய், கசப்புக்காய் பயிரிடுவோர், அவற்றைப் பயிரிடும் உறுப்பினர்களைக் கொண்ட தொழில் கூட்டுறவு சேவை சங்கம் அமைத்து, அந்தக் கடுக்காய், கசப்புக்காய்களை சேகரித்து உதவினால் தூள் தயாரிக்கும் நிலையம் ஒன்றை அமைக்க ஏதுவாகும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் உற்பத்தி அதிகரிப்பது மட்டுமின்றி அன்னியச் செலாவணியும் நமக்கு அதிகமாகக் கிடைக்கும் நிலையில் அரசு இந்தத் திட்டத்தைத் தீட்டி, செங்கம் பகுதிக்கு கடுக்காய்த்தூள் தொழிற்சாலை கிடைக்க பரிசீலனை செய்யுமா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடுக்காய், கசப்புக்காய் தூள் தயாரிக்கும் நிலையம் அமைக்க உரிய முறைப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருவார்களேயானால் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதைப் பரிசீலிக்கும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

431—

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

* 3876—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் இதுவரை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (I.C.D.S.) எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் அமல் நடத்தப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மூலம் ஒவ்வொரு யூனியன்களிலும் வேலை பார்க்கும் நபர்கள் எத்தனை பேர்?

(இ) நடப்பு ஆண்டில் எத்தனை யூனியன்களில் இத்திட்டம் அமல் நடத்தப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992 ஏப்ரல் 1]

(அ) தமிழ்நாட்டில் இதுவரை 69 ஊராட்சி ஒன்றியங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் குழந்தைகளின் எண்ணிக்கைக்கேற்ப அதிகபட்சமாக 100 மையங்கள் திறக்கப்படுகின்றன. ஒவ்வொரு மையத்திலும் இரண்டு அங்கன்வாடி பணியாளர்களும் ஒரு உதவியாளரும் பணியமர்த்தப்படுகின்றனர். மேலும் ஒவ்வொரு திட்டப்பகுதியிலும் (ஊராட்சி ஒன்றியம்) ஒரு குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலரும் நான்கு மேற்பார்வையாளர்களும் உள்ளனர்.

(இ) நடப்பு ஆண்டில் இத்திட்டம் 26 ஊராட்சி ஒன்றியங்களில் அமலாக்கப்படுகின்றது.

433—

பூம்புகார் தொகுதியில் மைதா தொழிற்சாலை.

*3304—திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பூம்புகார் தொகுதியில் அதிகமான அளவு மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படுவதால் இங்கு மைதா மாவு, ஜவ்வரிசி போன்றவை தயாரிக்க ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், இத்தொழிற்சாலை விரைவில் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

முற்பகல் 10-30

2. அறிவிப்பு.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.